**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவாடானை</u>**

**<u>அசல் வழக்கு எண். 101/2022</u>**

PW1 – திரு.சாகுல்ஹமீது நாள். 20.12.2023

(1969ம் ஆண்டில் 44 வது பிரிவின்படி) திரு.தெ.மனிஷ்குமார், பி.எஸ்.சி., பி.எல் (Hons)., மாவட்ட உரிமையியல் நீதிபதி, திருவாடானை அவர்கள் முன்னிலையில், மாவட்ட உரிமையியல் நீதிமன்ற Bench clerk (இளநிலை உதவியாளர்) திரு.S.துரைமுருகன் என்பவர் சாட்சியிடம் சத்தியபிரமாணம் கோரி அதனடிப்படையில் பதிவு செய்த வாக்குமூலம்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

1. நான் எந்த வருடம் தேவகோட்டை சென்றேன் என்றால் 20 வருடங்களுக்கு முன் சென்றேன். 1ம் பிரதிவாதியும், 5ம் பிரதிவாதியும் நிரந்தரமாக அஞ்சுகோட்டை கிராமத்தில் குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 2 முதல் 4 பிரதிவாதிகளின் தகப்பனார் ராவுத்தர் அஞ்சுகோட்டை கிராமத்தில் குடியிருந்து வந்து அங்கேயே இறந்துவிட்டார் என்று சொன்னால் சரிதான். எனக்கும் எனது உடன்பிறந்தவர்களுக்கும் நல்ல உறவுமுறை இருந்து வருகிறது என்று சொன்னால் சரியல்ல, கடந்த 20 வருடங்களாக உடன்பிறந்தவர்கள் எனக்கு விரோதியாகி விட்டனர். 20 வருடங்களுக்கு முன்னர் தாவா சொத்துக்களை பார்த்துள்ளேனா என்றால் (**சாட்சி இக்கேள்விக்கு முதலில் நான் பார்க்கவில்லை வெளிநாட்டில் இருந்தேன் என்று பதில் கூறிவிட்டு பின்பு நான் பார்த்தேன் தாவா சொத்துக்களை பற்றி எனக்கு தெரியும் என பதிலை மாற்றி கூறியுள்ளார்**. )

2. தாவா சொத்தை நான் பார்த்ததில்லை என்றும் தாவா சொத்தை பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல. 20 வருடங்களாக உடன்பிறந்தவர்களுடன் பகை ஏற்பட்டுள்ளது என சொல்லியுள்ளேன் என்றும்

தாவா சொத்தை பிரித்து தர சொல்லி கேட்டேனா என்றால் கேட்டேன், அதன் அடிப்படையில் தாவா சொத்துக்கள் பிரிக்கப்பட்டு எனது பாகத்தை நான் அனுபவம் செய்து வருகிறேன். எப்பொழுது எனது உடன்பிறந்தவர்களுடன் வாய்மொழி பாகப்பிரிவினை எப்பொழுது ஏற்பட்டது என்றால் 1994ம் வருடம் ஏற்பட்டது.

3. 1994ம் வருடம் செய்து கொண்ட பாகப்பிரிவினையில் எனக்கு எவ்வளவு சொத்து ஒதுக்கப்பட்டது என்றால் 1 ஏக்கர் நிலமும், 10 செண்ட் வீட்டுமனையும் ஒதுக்கப்பட்டது. மேற்படி எனக்கு ஒதுக்கிய பாக சொத்திற்கு யார் பெயரில் பட்டா இருந்து வருகிறது என்றால் எனது தகப்பனார் முகம்மது ராவுத்தர் என்ற மம்மது பெயரில் இருந்து வருகிறது. எதற்காக மேற்படி பாகத்திற்கு எனது பெயரில் வருவாய் ஆவணங்கள் மாற்றப்படவில்லை என்று சொன்னால் எழுத்துபூர்வமாக பாகம் ஒதுக்காததால் மாற்றவில்லை. மேற்படி 1994ம் வருடம் நடந்த வாய்மொழி பாகப்பிரிவினையைப் பற்றி இவ்வழக்கில் சொல்லவில்லை என்று சொன்னால் சரிதான்.

**(வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது)**

(ஓம்/திரு.தெ.மனிஷ்குமார்)
மாவட்ட உரிமையியல் நீதிபதி
திருவாடானை